# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

**முறையீட்டு மனு எண்: 159/மா/2017**
**ஆணை நாள்: 12–12–2018**

திரு. கா. ராமச்சந்திரன்,
துத்துக்குடி. --- **முறையீட்டு மனுதாரர்**

ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி,
தூத்துக்குடி. --- **எதிர்மனுதாரர்**

தூத்துக்குடி மாவட்டம், குறுக்கு சாலை போஸ்ட் 2/19A- குமாரபுரம் என்ற முகவரியில் வசிக்கும் திரு. கா. ராமச்சந்திரன் என்பவரது 21/07/2017 தேதியிட்ட முறையீட்டு மனு இம்முறை மன்ற நடுவத்தில் 24/07/2017 அன்று பெறப்பட்டு முறையீட்டு மனு எண்.159/2017 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு மீதான விசாரணையின்பொழுது அளிக்கப்பட்ட வாக்குமூலங்கள் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் தாக்கல் செய்த எதிர்வாதுரை பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை

தூத்துக்குடி மாவட்டம், குறுக்கு சாலை போஸ்ட் 2/19A, குமாரபுரம் என்ற முகவரியில் வசிக்கும் திரு. கா. ராமச்சந்திரன் என்பவர் தூத்துக்குடி அருள்மிகு வைகுண்டபதி திருக்கோவிலுக்கு சொந்தமான கதவு எண்.4A, 5 மற்றும் கதவு எண்.6 ஆகிய கட்டிடங்கள் மற்றும் குடியிருப்புகள் திருக்கோவில் நிர்வாகத்திலும், மாநகராட்சியிலும், தூத்துக்குடி உள்ளூர் திட்டக் குழுமத்திடமும் அனுமதி பெறாமல் கட்டிய கட்டடங்களை இடித்து அப்புறப்படுத்த தனது 21.07.2017 தேதியிட்ட முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 09.08.2018 தேதியிட்ட அழைப்பாணையின்படி முறையீட்டு மனுதாரரை இம்முறைமன்ற நடுவத்தில் 23.8.2018 அன்று ஆஜராகி விளக்கம் அளிக்க ஆணையிடப்பட்டது. ஆனால் மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகவில்லை.

இம்முறைமன்ற நடுவத்தின் 2•8.2017 தேதியிட்ட அறிவிப்பாணையில், தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர், இம்முறையீட்டு மனு குறித்த தனது விளக்கத்தினை அறிக்கை மூலம் சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டது. தூத்துக்குடி ஆணையர் தனது 9.7.2018 தேதியிட்ட எதிர்வாதுரையில் தூத்துக்குடி மாநகராட்சி பகுதி வடக்கு சம்மந்த மூர்த்தி தெரு கதவு எண்.4எ, பெருமாள் கோவில் தெரு கதவு எண்.5 மற்றும் 6ல் உள்ள கட்டடங்கள் இந்த சமய அறநிலையத்துறைக்கு சொந்தமானது என்றும், மனுவில் குறிப்பிட்டுள்ள கதவு எண் கட்டிடங்களில் குடியிருப்பவர்களை கோவில் ராஜகோபுரம், வாகனபிறை மடப்பள்ளி பணியாளர்கள் குடியிருப்பு போன்றவைகள் கட்டுவதற்கு ஏதுவாக மேற்கூறிய கட்டிடங்களை காலி செய்யக்கோரி கோவில் நிர்வாகம் சார்பில் அறிவிக்கப்பட்ட நிலையில் மேற்படி கட்டிடங்களில் குடியிருப்பவர்கள் சென்னை உயர்நீதி மன்றம் மதுரைக் கிளையில் வழக்கு எண்.W.P. (MD) No.21985/2017, W.P.(MD) No.22063/2017 மற்றும் WP MD No.22087/2017ன்படி வழக்குகள் தொடர்ந்து நடைபெற்று வந்த நிலையில் 09.02.2018 அன்று சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக் கிளை அளித்த தங்களது தீர்ப்பில் மனுதாரர்கள் 31.08.2018 தேதியன்றோ அல்லது அதற்கு முன்பாக நிர்வாக அலுவலர் அருள் மிகு வைகுண்டபதி திருக்கோவில் தூத்துக்குடி என்ற 3வது பிரதிவாதியிடம் கட்டிடத்தை காலி செய்து சாவியை ஒப்படைக்க வேண்டும் எனவும், வாதிகள் கட்டிடத்தை காலி செய்த பின்பு கட்டிடம் கட்டும் பணிகளை மேற்கொள்ளலாம் எனவும் தீர்பளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும் மாநகராட்சி அலுவலர்கள் தல ஆய்வு மேற்க்கொண்டபொழுது கட்டிடங்களில் இருப்பவர்கள் சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை 09/02/2018 தேதிய உத்தரவுப்படி 2018 ஆகஸ்ட் மாதத்திற்குள் காலி செய்து விடுவோம் என்றும் தெரிவித்துள்ளார்கள் என்றும், மேற்கண்ட கட்டிடங்கள் இந்த சமய அறநிலயத் துறைக்கு சொந்தமானது என்பதால் அறநிலயத்துறை தான் தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மேற்படி கட்டிடங்கள் மாநகராட்சிக்கு பாத்தியமான சொத்து இல்லை என்றும், மாநகராட்சி சாலையிலோ பொது இடங்களிலோ ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். ஆணையர், முதலமைச்சரின் தனி பிரிவுக்கு அனுப்பிய கடிதத்தில் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டங்களுக்கு மாநகராட்சி சட்டப்படி சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிப்பு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 09.05.2018 தேதியிட்ட அழைப்பாணையின்படி 27.06.2018 அன்று ஆஜரான தூத்துக்குடி மாநகராட்சி உதவிப் பொறியாளர் தூத்துக்குடி வைகுண்டம் திருக்கோவிலுக்கு சொந்தமான கதவு எண்.4எ, 5 மற்றும் கதவு எண்.6 ஆகிய கதவு எண்களில் குடியிருப்போர்கள் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை உத்தரவின்படி ஆகஸ்ட் மாதத்தில் காலி செய்துவிடுவோம் என்றும் தெரிவித்துள்ளார்கள் என்றும் மாநகராட்சி சாலையிலோ மற்ற பொது இடத்திலோ ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரைகிளை மனுதாரர்களுக்கு ஆறு மாத காலம் அவகாசம் அளித்து 31.08.2018 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ கட்டிடத்தினை காலி செய்து அதன் சாவியினை வழக்கின் மூன்றாவது பிரதிவாதியிடம் (3rd Respondent) ஒப்படைக்க வேண்டும் என மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை தங்களது 09.02.2018 அன்று அளிக்கப்பட்ட தீர்ப்பில் உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்நேர்வில் மனுதாரரின் மனு மற்றும் மாநகராட்சி ஆணையரின் எதிர்வாதுரை அனைத்தும் பரிசீலிக்கப்பட்டன. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை 09.02.2018 அன்று அளிக்கப்பட்ட தீர்ப்பின் உத்தரவில் மனுதாரர்கள் மேற்படி கட்டடங்களை 31.8.2018 அன்றோ அல்லது அதற்கு முன்போ காலி செய்து சாவி.னை ஒப்படைக்க உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில் இம்முறைமன்ற நடுவம் விசாரணை மேற்க்கொள்ளவேண்டிய நிலை எழவில்லை என்பதால் இவ்வழக்கினை முடித்துவைக்கலாம் என கருதி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக

பெறுநர்

1. திரு. சா. ராமச்சந்திரன்,
   2/19A, குமாரபுரம்,
   குறுக்கு சாலை அஞ்சல்
   தூத்துக்குடி மாவட்டம்.
2. ஆணையர்,
   தூத்துக்குடி மாநகராட்சி,
   தூத்துக்குடி.